விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 21 புதன்கிழமை (04.04.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 106


ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க சார்க் நாடுகள் ஒன்றிணைய வேண்டும்

## புதுடில்லியில் ஜனாதிபதி உரை

(புதுடில்லி)

தெற்காசிய பிராந்தியத்தில் பயங்கரவாதத்தை முறியடிக்க சார்க் எனப்படும் தெற்காசிய கூட்டமைப்பு நாடுகள் ஒருங்கிணைந்த அணுகுமுறையினை மேற்கொள்ள வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார். இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நேற்று ஆரம்பமான 14 ஆவது சார்க் உச்சி மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இந்தக் கருத்தினை வெளியிட்டுள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)



## இந்திய மீனவர்கள் 14 பேர் இலங்கை மீனவர்களால் கடத்தல்

(கொழும்பு)

இந்திய இலங்கை எல்லைப் பகுதியில் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் 14 பேரை இலங்கையின் தென்பகுதி சிங்கள மீனவர்கள் கடத்திச் சென்று அடித்து துன்புறுத்தியுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கடந்த 28 ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்ற இவர்கள் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (04 ஆம் பக்கம் பார்க்க)

## 14 ஆவது சார்க் மாநாடு புதுடில்லியில் நேற்று ஆரம்பம்

(புதுடில்லி)

சார்க் அமைப்பின் 14 ஆவது உச்சி மாநாட்டை நேற்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தலைநகர் புதுடில்லியில் ஆரம்பித்து வைத்தார். இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், பூட்டான், நேபாளம், மியான்மார், ஆப்கானிஸ்தான் ஆகிய எட்டு நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட சார்க் அமைப் பின் 14 ஆவது உச்சிமாநாடு இன்றும் நடைபெறுகிறது.

இம் மாநாட்டில் பங்கேற்ற எட்டு நாடுகளின் தலைவர்கள், வெளியுறவு அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளும் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டனர். மேலும் (04 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் விமானத் தாக்குதல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு அலம்பில் பிரதேசத்தில் நேற்று பிற்பகல் விமானப்படையினரால் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் குடியிருப்புக்கள் மீது நடத்தப்பட்ட இத் தாக்குதலில் (04 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் விமானத்தாக்குதலையடுத்து நாடாளுமன்றத்துக்கு விசேட பாதுகாப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானப் படைத் தளத்தின் மீது நடத்தப்பட்ட வான்தாக்குதலைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் நாடாளுமன்றத்தின் பொதுச் செயலாளர் பிரியானி விஜயசேகர தெரிவித்துள்ளதாவது;

நாடாளுமன்றத்தின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு எங்களால் முடிந்தவற்றை நாம் செய்துள்ளோம். எனினும் பாதுகாப்புக் காரணங்களுக்காக அதனைத் தெரிவிக்க முடியாது. இது (04 ஆம் பக்கம் பார்க்க)

## நீர்கொழும்புச் சிறையில் கைக்குண்டுகள் மீட்பு

நீர்கொழும்பு சிறைச்சாலைக்குள் இருந்து நேற்று பல கைக்குண்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இக் குண்டுகளை சிலர் வெளியில் இருந்து சிறைக்குள் எறிந்திருக்கலாம் என சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தற்போது சிறைச்சாலைக்குள் தேடுதல் நடாத்தப்பட்டு வருவதாகவும் நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-3)

## அரசுடன் இணைந்த ஐ.தே.க.எம்.பி. மீண்டும் தனது கட்சியுடன் இணைவு

(கொழும்பு)

அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட ஐக்கிய தேசியக்கட்சியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எட்வேட் குணசேகர நேற்று மீண்டும் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர்ந்து கொண்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் நேற்று பாராளுமன்றத்தில் ஆற்றிய விசேட உரையை அடுத்து எட்வேட் குணசேகர எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். பாராளுமன்றத்தில் உரையாற்ற கோரிக்கை விடுத்த போதும் அவருக்காக (04 ஆம் பக்கம் பார்க்க)

## கல்முனையில் துப்பாக்கிச் சூடு நான்கு அதிரடிப்படையினர் பலி

(கொழும்பு)

அம்பாறை மாவட்டம் கல்முனைப் பிரதேசத்தில் நேற்று மாலை இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களின் போது விசேட அதிரடிப்படையின் சார்ஜன் ஒருவர் உட்பட நான்கு பேர் கொல்லப்பட்டுள்ளார்கள்.

நேற்று மாலை வீதிக் கண்காணிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை அவர்கள் மீது விடுதலைப்புலிகளினால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும், மோட்டார் சைக்கிளில் வந்த விடுதலைப்புலிகள் தாக்குதலை (04 ஆம் பக்கம் பார்க்க)

## எந்த பகுதியையும் தாக்கும் ஆற்றல் விடுதலைப்புலிகளுக்கு ஏற்பட்டுள்ளது



### நாடாளுமன்றத்தில் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளிற்கு நாட்டின் எந்தவொரு பகுதியையும் குறிவைக்க கூடிய ஆற்றல் இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார். விடுதலைப்புலிகள் அண்மையில் கட்டுநாயக்கா விமானப்படைத் தளம் மீது கொண்ட வான் தாக்குதலில் இருந்து இது புலப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கலந்துரையாடுவதற்கு பாராளுமன்றத்தை கூட்ட வேண்டும் என்ற கோரிக்கையை (04 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இருவர் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியா செட்டிக்குளம் பிரதேசத்திலுள்ள புதுக்குளம் பகுதியில் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்த முற்பட்டவர்கள் மீது இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட பதில் தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இத் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ள இருவரது சடலங்களும் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)

மிதிவெடி விழிப்புணர்விற்கும் பங்களிப்பிற்குமான சர்வதேச தினம் - ஏப்ரல் 04
(C-670) சர்வோதயம்
unicef

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2007

# பிளமிங்கின் அசத்தல் சதத்தில் நியூசிலாந்து அணி அபார வெற்றி

ஸ்ரீபன் பிளமங்கின் அசத்தல் சதத்தில் நியூசிலாந்து அணி பங்களாதேஷை 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று வரும் உலகக் கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் அன்ரிக்குவாவில் நடைபெற்ற சூப்பர் 8 ஆட்டத்தில் நியூசிலாந்து – பங்களாதேஷ் அணிகள் மோதின.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணித் தலைவர் ஸ்ரீபன் பிளமிங் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தார். இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 48.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 174 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் மொகமட் ரவீக் ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களையும் தாமிம் இக்பால், அகமெட், சஹிபுல் ஹசன், ஓமர் ஆகியோர் தலா 29, 27, 25,22 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் நியூசிலாந்து அணிசார்பாக ஸ்ரைரிஸ் 4 விக்கெட்டுக்களையும் ஓரம் 3 விக்கெட்டுக்களையும் பொன்ட் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 175 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி ஸ்ரீபன் பிளமிங் அசத்தலான சதத்தினால் 29.2 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 178 ஓட்டங்களைப் பெற்று 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் ஸ்ரீபன் பிளமிங் 102 ஓட்டங்களையும் மார்சல் 50 ஓட்டங்களையும் பெற்றனர். ஆட்ட நாயகனாக 10 ஓவர்கள் பந்து வீசி 15 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 2விக்கெட்டுக்களை வீழ்த்திய நியூலாந்து அணியின் பொன்ட் தெரிவானார். (ச–5)






## யாழில் மார்ச் மாதத்தில் மட்டும் 39 பொதுமக்கள் சுட்டுக்கொலை

### மனித உரிமை அமைப்பு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த மார்ச் மாதத்தில் மாத்திரம் 39 பொதுமக்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக மனித உரிமை அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் கடந்த மூன்று மாத காலப் பகுதியில் மாத்திரம் குடாநாட்டில் 67 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக மனித உரிமைகளுடன் தொடர்புடைய அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

இக்காலப் பகுதியில் 68 இளைஞர்கள் அல்லது இளம் குடும்பஸ்தர்கள் காணாமல் போயுள்ளனர். அத்துடன் 29 இளைஞர்கள் அல்லது இளம் குடும்பஸ்தர்கள் ஊரடங்கு நேரத்திலும் பகல்வேளைகளிலும் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர் என கூறப்பட்டுள்ளது. (ச–3)

## அடுத்து வரும் இரு மாத காலத்துக்குள் 15 ஆயிரம் பேருக்கு ஆசிரிய நியமனம்

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் சகல பிரதேசங்களிலும் நிலவும் ஆசிரிய பற்றாக் குறைப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் நோக்கில் இன்னும் இரு மாத காலத்திற்குள் மேலும் 15 ஆயிரம் ஆசிரியர்களுக்கான புதிய நியமனங்கள் வழங்கப்படும் என கல்வியமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த தெரிவித்தார்.

கல்விச் சேவைகள் ஆணைக் குழுவினால் 6 ஆம், 10 ஆம் தர மாணவர்களிடையே மேற்கொள்ளப்பட்ட மொழி மற்றும் கணித அறிவு தொடர்பான ஆய்வறிக்கை வெளியீட்டு வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

ஏற்கனவே ஆசிரிய நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரிகளில் 19 ஆயிரம் பேருக்குப் பயிற்சிகள் வழங்க ஏற்பாடுகள் செய்துள்ளோம். வரலாற்றில்முன்னெப்போதும் இல்லாத அளவில் இவ்வருடம் கல்வி மேம்பாட்டுக்காக மிகக் கூடுதலான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

கடந்த இரண்டு தசாப்த காலமாக இலங்கை மாணவர்களின் மொழித்திறன் மற்றும் எழுத்தாற்றல் என்பன மிகவும் குறைந்துவருவதாக இவ் வைபவத்தில் உரையாற்றிய கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ–5)

## திருட்டுடன் தொடர்புடைய சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்

நாயன்மார்கட்டு இராமலிங்கம் வீதியில் கடந்த 28 ஆம் திகதி 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபா பணம் திருடியதுடன் அங்கிருந்த இளம் யுவதியை பாலியல் வன்ம உறவுக்குப்படுத்தியதாக சந்தேகிக்கப்படும் நபர் ஒருவரை யாழ்ப்பாணப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்த சந்தேக நபர் யாழ். மாவட்ட நீதிமன்றில் பொலிஸாரால் ஆஜர்படுத்தப்பட்ட போது குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 16 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

கடந்த 28 ஆம் திகதி குறிப்பிட்ட வீட்டினுள் நுழைந்த ஆயுத தாரிகள் குழுவொன்றே இத் திருட்டில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ–5)

### உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம்

தீவக கல்வி வலயத்தில் அழகியல் பாட உதவிக் கல்விப்பணிப்பாளருக்கான வெற்றிடம் உள்ளது.

ஆசிரியர் சேவையில் தரம் I, தரம் 2-I ஐச் சேர்ந்த சித்திரம் அல்லது சங்கீதம் அல் லது நடன பாட ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை இம் மாதம் 17 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கும்படி வலயக் கல்விப் பணிப்பாளர் எ.இராஜேந்திரன் கேட்டுள்ளார். (ச)

## நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்.மாநகர சபை எல்லைக் குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி கட்டம் கட்டமாக வழங்கப்படத் திட்மிடப்பட்டுள்ளது.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி ம.மரியதாசன் அறிவித்துள்ளார்.

நாளைக் காலை 8.30 மணிக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்திலும் 11 மணிக்கு புங்கங்குளம் சனசமூக நிலையத்திலும் 2 மணிக்கு நல்லூர் வடக்கு சன சமூக நிலையத்திலும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. (ச)

## ஆய்வுகூட சேவை மீண்டும் ஆரம்பம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை அரசினர் வைத்திய சாலையில் மீண்டும் மருத்துவ ஆய்வுகூட நடமாடும் வாகன சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பிரதி வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் இம் மருத்துவ சேவையில் இரத்தம், சிறு நீர் ஆகிய பரிசோதிக்கப்பட்டு மருந்துகள் வழங்கப்படவுள்ளது. (ச–72)

## மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் மஞ்சத்தடி ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் மகா கும்பாபிஷேகம் நாளை நடைபெறவுள்ளது.

இன்று நண்பகல் 12 மணிமுதல் எண்ணெய்க்காப்பு நிகழ்வு இடம் பெறும். (ச)

## சாரதி அனுமதிப் பத்திர பரீட்சை திகதிகளைப் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான எழுத்து மற்றும் செயல் முறைப் பரீட்சைகள் இன்றுமுதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் அறிவித்துள்ளார்.

விண்ணப்பம் செய்த பரீட்சார்த்திகள் தங்களுக்குரிய எழுத்து மற்றும் செயல்முறைப் பரீட்சைத் திகதிகளை அலுவலக நாள்களில் முற்பகல் 12 மணிவரை யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளமுடியுமென அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## பரீட்சைப் பெறுபேறு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் முன்னணிப் பெறு பேறுகள் வருமாறு,

கி.சுரேஷ் 9ஏ சி, க.திவாகரன் 6ஏ பி 2சி எஸ், தெ.செந்தூரன் 5ஏ 3பி 2எஸ், சி.சயந்தினி 5ஏ 2பி 2சி, த.மனோகாந்தன் 4ஏ 3பி 2சி.

**யாழ்.இந்துக் கல்லூரி**

இணையத்தளம் மூலம் பெறப்பட்ட முன்னிலைப் பெறுபேறுகள்.

*10ஏ*–சி.விமலன், ப.திருவரங்கன், பு.நிரோசன், ச.கௌசிகன், செ.செல்வநிவேதன், க.சுரேஸ்குமார், பி.லோகபிரசாத்.

இதனைவிட 30 மாணவர்கள் 9 ஏ சித்தியும் 14 மாணவர்கள் 8 ஏ சித்தியும்பெற்றுள்ளனர். 7ஏ 20,6 ஏ 23, 5 ஏ 22 பேர்.

இதேவேளை 9 ஏ சித்தி பெற்ற மாணவர்கள் அனைவரும் ஆங்கில இலக்கியம் கற்றதால் அப் பாடத்தில் ஏ சித்தி பெற முடியவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச)

## மன்னாரில் விமானத் தாக்குதல்

(கிளிநொச்சி)

ஓமந்தை, மன்னார் ஆகிய இடங்களிலுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைகள் மீது நேற்று விமானத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக விமானப் படையினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று மதியம் 12.30 மணியளவில் ஓமந்தைக்கு வடக்காகவுள்ள விடுதலைப்புலிகளின் கனரக ஆயுதங்கள் நிலைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த இடம் ஒன்றின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அதன் பின் எம்.ஐ–24 ரக ஹெலிகொப்டரைப் பயன்படு த்தி அப்பகுதியில் விடுதலைப்புலிகளின் வேறு இலக்குகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக விமானப் படையின் பேச்சாளர் கூறினர்.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் மன்னாருக்கு வடக்கேயுள்ள கடற்புலிகளின் முகாமை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகவும் விமானப்படையின் பேச்சாளர் குறூப் கப்டன் அஜந்த டி சில்வா தெரிவித்தார். (ச–3)

## எச்.என்.டி.ஏ. பெறுபேறு வெளியானது

(யாழ்ப்பாணம்)

உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பழையப் பாடத் திட்டப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. சித்தியடைந்தோர் விபரம் வருமாறு,

என்.இராசநாயகம், ரி.ரவீந்திரநாதன், என்.பி.ஜேசுராசா, பி.முத்துவிளங்கம், எ.சத்தியமூர்த்தி, வி.ஞானசுந்தரம், எம்.விஜயரகுநாதன், எஸ்.ஆர்.ராசையா. (ச–136)

## பொடா வழக்கிலிருந்து பழ.நெடுமாறன் விடுதலை

(சென்னை)

பொடா வழக்கிலிருந்து பழ.நெடுமாறன், சு.ப.வீரபாண்டியன், பாவாணன், சாகுல் அமீது, மருத்துவர் தாயப்பன் ஆகியோரை விடுதலை செய்து நேற்று பொடா சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இத் தீர்ப்பின் மூலம் இவர்களுக்கு பொதுக் கூட்டங்களில் பேசுவதற்கு இருந்த தடையும் வெளிநாடுகளுக்குச்செல்வதற்கு இருந்த தடையும் நீங்கியுள்ளது.

கடந்த 2002 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பை ஒட்டி 2002ஏப்ரல் 13 ஆம் திகதி சென்னையில் நடந்த பொதுக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதற்காக பழ.நெடுமாறன் உள்ளிட்டோர் மீது பொடா வழக்குப் போடப்பட்டது.

அதனடிப்படையில் அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு ஏறக்குறைய ஒன்றரை ஆண்டு காலம் சிறையில் வைக்கப்பட்டிருந்தனர்.

பின்னர் பிணையில் வெளி வந்த போதும் பொதுக் கூட்டங்களில் பேசக் கூடாது. ஊடகங்களுக்கு நேர்காணல் வழங்கக் கூடாது. தடை செய்யப்பட்ட இயக்கங்களைப் பற்றிப் பேசக் கூடாது. வெளி நாடுகளுக்குச் செல்லக் கூடாது எனப் பலவிதத் தடைகள் அவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ–5)


## அழைப்புக் கட்டளை

**(இல. 16- பிரிவு 55 ( 1 ) )**

**யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள**
**மாவட்ட நீதிமன்றத்தில்**

கிருஷ்ணன் நாகேஸ்வரன்
மே/பா. சி.தனபாலசிங்கம்
61/2, குறுக்குத் தெரு நல்லூர்,
யாழ்ப்பாணம்.

வழ.இல. மணநீக்கம்/ 744

வழக்காளி

எதிர்

கிருஷ்ணன் நாகேஸ்வரன் பெண் சரோஜினிதேவி
மந்திகை தெற்கு, மந்திகை,
பருத்தித்துறை.

எதிராளி

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எதிராளிக்கு

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் நடைபெற்ற திரும ணப் பதிவை இரத்துச் செய்வதற்கு இந் நீதி மன்றத்தில் உமக்கு எதிராக வழக்குத் தொடுத்துள்ளாராதலால், அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2007 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 8ஆந் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்தில் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத் தவறும் சந்தர்ப்பத்தில், வழக்கானது மறுகட்சிக்காரர் இல்லாமலே மேற்கொண்டு நடாத்தப்பட்டு விளங்கப்படும் என அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்.

பதிவு பெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக் கூடிய முகவரி ஒன்றைக் கூறும் விபரக் குறிப்பொன்றை கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

| | |
|---|---|
| வரைந்தது | நீதிமன்றக் கட்டளைப்படி |
| மு.திருநாவுக்கரசு | து.சிறீமோகன் |
| வழக்காளியின் சட்டத்தரணி | பதிவாளர், |
| | யாழ்.மாவட்ட நீதிமன்றம். |

*குறிப்பு :-* விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ் வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெற விரும்பினால், பதிவு செய்யப்பட்ட முகவரி ஒன்றை இந் நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும், பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்காகும் செலவை மேவுவதற்கு தேவைப்படும் முத்திரைகளை கொடுக்குமாறும், 80 ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

2007 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 29 ஆந் நாளாகிய இன்று.

(802)

அன்பினால் தீர்க்கப்படாத அந்தப் பிரச்சினையும் பலாத்காரத்தால் தீர்க்க முடியாது என்பதை உலகம் உணரவேண்டும் என்பது வரலாற்று உண்மை.

—இங்கர்சால்

வலம்புரி

# இந்தியாவில் வைத்து முடிபு காண வேண்டும்

சார்க் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்குச் சென்றுள்ளார்.

இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இந்திய மத்திய அமைச்சர் மணிசங்கர் ஐயர் மற்றும் பிரணாப் முகர்ஜி ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

சார்க் மாநாட்டை ஒட்டி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியா சென்றிருப்பது இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பில் கலந்துரையாடுவதற்கான நல்லதோர் வாய்ப்பாகும்.

இச் சந்தர்ப்பத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், இந்திய மத்திய அரசும் தக்க முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இலங்கை மண்ணில் தொடர்ந்து நீடித்து வரும் இனப்பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வு காண வேண்டியதன் அவசியப்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

அதேநேரம் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எதிரான கோஷங்களுக்கும் குறைவில்லை. சமாதானப் பேச்சுவார்த்தை என்பதைக் கைவிட்டு யுத்தத்தின் மூலம் விடுதலைப்புலிகளை எதிர்கொள்ள வேண்டுமென்ற கொள்கையுடையவர்கள் அதிகாரப் பலத்தில் இருப்பதும் இங்கு கவனத்திற்குரிய விடயமாகும்.

சமாதானத்தை மிக சிறிய இனவாதக் குழுமம் எதிர்த்தாலும் ஒட்டுமொத்தமாக இந்நாட்டு மக்கள் சண்டையை விரும்பவில்லை.

இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு இலங்கை மண்ணில் அனைத்து மக்களும் சமவுரிமை பெற்று வாழ வேண்டுமென்பதே அனைவரினதும் உள்ளக் கிடக்கை.

எனினும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு சுயலாபம் கருதிய அரசியல்வாதிகள் தடையாக இருக்கின்றனர்.

இலங்கையின் அரசியல் யாப்பு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை உருவாக்கியிருப்பதால், தனிப்பட்டவர்களின் விருப்புவெறுப்புக்களைக் கடந்து இலங்கையில் சமாதானத்தைக் கொண்டு வர நிறைவேற்று அதிகாரத்தில் இருப்பவர் துணிய வேண்டும்.

கிடைத்த சந்தர்ப்பத்தை சமாதானத்திற்காகவும், மனித நல்வாழ்வுக்காகவும் உழைப்பது பிற்கால ஆத்ம திருப்திக்கும் உயர் பதவியைத் தந்த இறைவனுக்கு நன்றி செலுத்துவதாகவும் இருக்கும்.

எனவே இது விடயத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனக்கு இருக்கக் கூடிய அதிகாரத்தைச் சமாதானத்தின் மலர்வுக்காக அர்ப்பணிக்க வேண்டும்.

இனவாத சக்திகள் பின்னிப்பிணைந்திருக்கும் போது சமாதானத்தின் நினைப்புக் குறைவாகவே இருக்கும்.

கூடியிருப்போர் யுத்தத்தை விரும்புவோராயின் அவர்கள் சமாதானத்திற்கு எதிராகவும், யுத்தத்திற்கு ஆதரவுமாகவே செயற்பட்டுக் கொள்வர்.

இத்தகைய குழுமம் ஒன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சூழ்ந்திருப்பது புலனாகின்றது. இதிலிருந்து விடுபட்டு சமாதான சிந்தனையையும், பல்லின மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டுமென்ற நினைப்பையும் ஏற்படுத்தக் கூடியதாக இந்தியப் பயணத்தையும், சார்க் மாநாட்டையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதனூடே இலங்கையில் அவசரமான சமாதான அமுலாக்கத்தை இந்திய மத்திய அரசும் ஜனாதிபதி மகிந்தவிடம் வலியுறுத்த வேண்டும்.

இலங்கை இனவிவகாரத்தில் இந்தியா தனது தார்மீகப் பணியை செய்து முடிப்பதற்கு இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயத்தைப் பயன்படுத்திக் கொள்வது அனைத்து விடயங்களுக்கும் நன்மை பயப்பதாகும்.

சமாதானத்தை வலியுறுத்தும் அதேநேரம், இலங்கையின் பொறுப்பான பதவிகளில் இருப்போர் சமாதானத்துக்கு எதிராகப் பேசவேண்டாம் என ஜனாதிபதி மகிந்தவிடம் கேட்டுக் கொள்வதும் இவ்விடத்தில் தேவையானதாகும்.

# போர்நிறுத்த ஒப்பந்தம் தொடர்பான மக்கள் வாக்கெடுப்பு தேவையற்றது

## ஜாதிக ஹெலஉறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

போர் நிறுத்தத்தைக் கைவிடுவதற்கு பொதுமக்களிடம் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடத்த வேண்டிய அவசியமில்லை என்று ஜாதிக ஹெலஉறுமய தெரிவித்துள்ளது. பொதுவாக்கெடுப்பு ஒன்றை நடத்தி போர்நிறுத்த உடன்பாட்டை முடிபுக்குக் கொண்டு வருவதா? இல்லையா? என்பதனைத் தீர்மானிக்கப் போவதாக அரசாங்கம் அறிவித்ததனைத் தொடர்ந்தே ஹெல உறுமய இவ்வாறு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஹெல உறுமயவின் உறுப்பினர் உதய ஹமன்பில தெரிவித்ததாவது,

போர்நிறுத்த உடன்பாட்டின் சட்டபூர்வமான தன்மை ஏற்கனவே நீதிமன்றத்தில் முடிபெடுக்கப்பட்டுள்ளது. இந்த உடன்பாட்டைச் செய்து கொள்வதற்கு முன்னர் மக்களிடம் கருத்துக்களைக் கேட்கவில்லை. வாக்கெடுப்பை நடத்த அரசாங்கம் விரும்புவதனையிட்டு நாம் அச்சமடையவில்லை.

ஏனெனில் மக்கள் நிச்சயமாக இந்த ஒப்பந்தத்தை எதிர்ப்பார்கள். ஆனால் பொதுமக்களின் பணத்தை இந்த வாக்கெடுப்புக்கு செலவு செய்வது தேவையற்றது என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சர்வஜன வாக்கெடுப்பிற்கு முன்னர் அரசாங்கம் மூன்று கேள்விகளை முன்வைக்க வேண்டுமென முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது. தற்போதுள்ள நிலையில் போர்நிறுத்த உடன்பாடு பேணப்படுதல் வேண்டுமா? அதில் சில திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமா? இல்லையேல் உடன்பாடு கைவிடப்பட வேண்டுமா? போன்ற கோரிக்கைகளுக்கே பதிலளிக்க வேண்டுமென முஸ்லிம் காங்கிரஸ் கோரியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-1)

# சர்வதேச மன்னிப்புச் சபையின் மீது மக்கள் விடுதலை முன்னணி பாய்ச்சல்

சர்வதேச மன்னிப்புச் சபை, இலங்கை அரசாங்கத்திற்கும் இலங்கைக் கிரிக்கெட் குழுவிற்கும் எதிராக கட்டவிழ்த்துவிட்டுள்ள அவதூறான பிரசாரங்கள் தொடர்பில் நாடாளுமன்றம் கவனத்தைச் செலுத்த வேண்டுமென ஜே.வி.பி. கோரியுள்ளது.

நாடாளுமன்றத்தில் இதுதொடர்பாக நேற்று விசேட உரை ஒன்றை ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச ஆற்றினார். மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறும் உலகக் கிண்ணப் போட்டிகளில் திறமையாக விளையாடி வரும்இலங்கை அணியின் மன நிலையை சிதைப்பதையே நோக்காகக் கொண்டு இப் பிரசாரம் மேற்கொள்ளப்படுவதாக அவர்குறிப்பிட்டார்.

இலங்கையின் மனித உரிமைகள் மீறப்படுவதாகச் சுட்டிக்காட்டி சிறிலங்கா சட்டப்படி விளையாடுவீர் என்ற வாசகத்துடன் கூடிய கிரிக்கெட் பந்துகளை உலகக் கிண்ணப் போட்டிகளில் சர்வதேச மன்னிப்புசபை விநியோகித்து வருகின்றது.

அத்துடன் இலங்கைக் கிரிக்கெட் அணியினர் சட்டப்படி விளையாடத் தெரியாதவர்கள் எனக் காட்டுவதற்கும்சர்வதேச மன்னிப்புச் சபை காட்டுவதாக விமல் வீரவன்ச குற்றம் சுமத்தினார். (ச-3)

# இலங்கை விமானப் படையின் ராடர்கள் ஆயிரம் அடிக்கு கீழ் தொழிற்படாதவை

## கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் வான்படையின் தாக்குதலின் பின்னர் கொழும்பு மிகப்பெரும் சவாலை எதிர்நோக்கியுள்ளது. கடந்த ஞாயிறு இரவு வந்த அவர்களின் வானூர்திகள் தளத்தின் வான்பகுதியை இரு மணிநேரங்கள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்துள்ளன.

இந்தச் சம்பவம் அரசாங்கத்தையும் அதன் பாதுகாப்பு நடைமுறைகளையும் தொங்கு நிலையில் விட்டுள்ளது என கொழும்பு ஊடகம் ஒன்று தனது பாதுகாப்பு ஆய்வு நிலைவரப் பத்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

போர்நிறுத்தம் அமுலில் உள்ள போதும் நாளாந்தம் தாக்குதல்கள் அதிகரித்தபடி உள்ளன. இது போர்நிறுத்த உடன்பாட்டை மேலும் நெருக்கடிக்குள் இட்டுச் சென்றுள்ளது. இடம்பெற்று வரும் போரில் விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை தம்மிடம் உள்ள வான்படைப் பலத்தை பயன்படுத்த பின்னிற்கவில்லை.

எனினும் விடுதலைப்புலிகளால் தற்கொலைப் பாணியிலான தாக்குதலே நடத்த முடியும் என படைத்தரப்பு வட்டாரங்கள் தெரிவித்திருந்தன. அதற்குரிய பாதுகாப்பு ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவை மேலும் தெரிவித்திருந்தன.

மிகவும் ஆபத்தான விடயம் என்னவெனில் விமானப் படையினரிடம் உள்ள ராடர்கள் ஆயிரம் அடிக்கு குறைவான உயரத்தில் தொழிற்பட முடியாதவை. எனவே ஆயிரம் அடிக்குக் கீழே பறக்கும் வானூர்திகளால் எந்த இலக்குகளையும் தாக்க முடியும்.

எனவே விடுதலைப்புலிகளால் பொருளாதார மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை இலகுவாகத் தாக்க முடியும் என்பது தெளிவு. விடுதலைப்புலிகள் கொழும்புத் துறைமுகத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடற்கண்ணி வெடிகளை விதைப்பதற்கும் முயற்சி எடுத்திருந்தனர்.

இதன் மூலம் அவர்கள் ஒரு முழு அளவிலான போரை ஆரம்பிக்கும் போது தம்மிடம்உள்ள வான்படைப் பலத்தை பயன்படுத்துவார்கள் என்பது தெளிவு. இந்த நிலைமைகளை சமாளிப்பதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளதா? என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளிடம் உள்ள சுவிஸ்லாந்து நாட்டுத் தயாரிப்பான பயிற்சி விமானம் மிகவும் கூடிய தூரவீச்சுக் கொண்டது. இது விடுதலைப்புலிகள் தமது தலைவர்களையும் உயர்பெறுமதியான பொருள்களையும் கடத்துவதற்குப் பயன்படும்.

இந்த விமானம் மூலம் அவர்கள் தாய்லாந்து, கம்போடியா போன்ற நாடுகளுக்கும் செல்ல முடியும் என்பதுடன் ஆயுதங்கள் மற்றும் மின்னியல் சாதனங்களையும் நகர்த்த முடியும்.

இந்த விமானம் இரவிலும் தொழிற்படக் கூடியது. நவீன ரக பி-21 விமானங்கள் போர்க்களங்களிலும் படையினருக்கெதிராகப் பயன்படுத்தக் கூடியவையாகவிருப்பதுடன் உளவுப் பணிகள், வானிலிருந்து புகைப்படங்களை எடுத்தல் போன்ற நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தக் கூடியவை என அவ் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# சாள்ஸ் அன்ரனிக்கு உயர் பதவி வழங்கத் தீர்மானம்

## லங்கா தீப செய்தி வெளியீடு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் சாள்ஸ் அன்ரனிக்கு அவ் இயக்கத்தில் உயர் பதவி ஒன்றை வழங்க புலிகள் இயக்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது என லங்கா தீப நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

லண்டன் பல்கலைக்கழகம் ஒன்றில் கணனித் தொழில்நுட்ப மற்றும் விமானப் பொறியியல்துறை தொழில் நுட்பம் ஆகியவற்றை கற்ற சாள்ஸ் அன்ரனியினாலேயே விடுதலைப்புலிகளால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலுக்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவருக்குக் கீழ் 8 விமானிகள் செயற்பட்டு வருவதாகவும் அச் செய்தியில் மேலும் தெரியவந்துள்ளது. (ச-5)

# பகுதி நேர ஆங்கில ஆசிரியருக்கு தீவகக் கல்வி வலயத்தில் வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

தீவகக் கல்வி வலயத்தின் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன. க.பொ.த. உயர் தர தகுதியுடன் க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கில பாடத்தில் விசேட சித்தி பெற்றவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

தகுதியானவர்கள் தங்கள் விண்ணப்பங்களை இம் மாதம் 17 ஆம்திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் எ.இராஜேந்திரன் அறிவித்துள்ளார். (ச)

# சிறுவர்களின் நலன் குறித்து ஆராய ஐ.நா.பிரதிநிதிகள் யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)


சிறுவர்கள் கொல்லப்படுதல், அங்கவீனப்படுத்தப்படுதல் மற்றும் அவர்களுக்கான மனிதாபிமான வழிகள் மூடப்படுதல் போன்ற சிறுவர் நலன் தொடர்பான ஆறு முக்கிய விடயங்களை ஆராய்ந்து ஐக்கிய நாடுகளின் செயற்பாட்டு அணிக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக குழுவொன்று யாழ்ப்பாணம் வந்துள்ளது.

இக் குழுவில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பு, ஐக்கிய நாடுகள் சிறுவர் அமைப்பு, சர்வோதயம், இலங்கை மனித உரிமைகள் ஆணையம், சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் பொது மக்கள் அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகள் நால்வர் அடங்கியுள்ளனர்.

இவர்கள் நேற்று முன்தினம் யாழ்.அரசாங்க அதிபர், மனித உரிமைகளுடன் தொடர்புடைய பொதுமக்களின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்துள்ளனர். அத்துடன் இவர்கள் தமது அமைப்புக்களின் யாழ்ப்பாண வதிவிடப் பிரதிநிதிகளையும் சந்தித்துள்ளனர்.

இதன்போது குறித்த செயற்பாட்டு அணியின் கிளை அமைப்பொன்றை யாழ்ப்பாணத்தில் அமைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ச-3)






நேற்று புதுடில்லியில் ஆரம்பமான சார்க் நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்ட இந்திய ஜனாதிபதி, பாகிஸ்தான் பிரதமர் மற்றும் இந்தியப் பிரதமர் ஆகியோருடன் இலங்கை ஜனாதிபதி உரையாடுவதை படத்தில் காணலாம்

# சில ஊடகங்கள் பயங்கரவாதத்திற்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றன

## அமைச்சர் ஹெகலிய குற்றச்சாட்டு



சில ஊடகங்கள் பயங்கரவாதத்திற்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றன. மூதூரில் தொண்டர் நிறுவனம் ஒன்றின் ஊழியர்கள் 17 பேர் இனந்தெரியாதோரால் கொலை செய்யப்பட்டபோது ஊடகங்கள் படையினர் மீது பழியைப் போட்டு பெரும் பிரசாரத்தை செய்தன.

ஆனால் ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தொண்டு நிறுவனம் ஒன்றின் ஆறு ஊழியர்களின் கொலைக்கு விடுதலைப் புலிகள் தான் காரணம் எனத் தெரிந்த பின்னரும் இது குறித்து ஊடகங்கள் அலட்டிக்கொள்ளாதமை ஆச்சரியமாக உள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடகப் பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார். நாட்டின் பாதுகாப்பு விவகாரம் தொடர்பாக அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பொன்று நேற்றுக் காலை தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அமைச்சர் மேலும் கூறியதாவது; அண்மையில் கட்டுநாயக்கா விமானப்படைத்தள முகாம் மீது புலிகள் தாக்குதல் நடத்திய போது கட்டு நாயக்கா விமான நிலையத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்களில் செய்தி வெளியாகிக்கொண்டிருந்தன. நான் ஜோர்தானில் தங்கியிருந்த போது இதனை நேரடியாக அவதானித்தேன். இலங்கையின் பொருளாதாரத்தை வீழ்ச்சி யடையச் செய்வதில் சிலர் கண்ணும் கருத்துமாகவுள்ளனர்.

இவ்வாறு சில ஊடகங்கள் செய்திவெளியிடுவது பயங்கரவாதத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதுபோன்றதாகும். 2002 ஆம் ஆண்டு விமான நிலையத்தின் மீதான புலிகளின் தாக்குதலின் போது உல்லாசப் பயணிகளின் வருகை வீழ்ச்சியடைந்தது.

இதனால் பல கோடி ரூபா நஷ்டம் இலங்கைக்கு ஏற்பட்டது இந்த நாட்டிற்கு சுமக்க முடியாத ஒரு பளுவாகும். இதுபோன்ற ஒரு செயலை இனியும் அங்கீகரிக்கமுடியாது. (ச)

# கொகுவளைப் பகுதியில் ஏழு பொதுமக்கள் கைது

கொகுவளைப் பகுதி மற்றும் கொழும்பு அயல் கிராமங்களில் தெகிவளைப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது இரு பெண்கள் உட்பட ஏழு மலையத்தைச் சேர்ந்த பொதுமக்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கைது செய்யப்பட்டவர்கள் நுவரெலியா , பதுளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் இவர்களை கொகுவளை காவல் நிலையத்தில் தடுத்துவைத்தள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

# அதிபர் பதவிக்கு வெற்றிடம்

வலிகாமம் வலயத்திற்குட்பட்ட யா/நவாலி மகாவித்தியாலய அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது. இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1, வகுப்பு 2.1 (பட்டதாரியாக இருக்கவேண்டும்) சேர்ந்தவர்களிடம் இருந்தும் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 1, வகுப்பு 2.1 (பட்டதாரியாக இருக்க வேண்டும்) வகுப்பு 2.11 (பயிற்றப்பட்ட பட்டதாரியாக இருக்க வேண்டும்) சேர்ந்தவர்களிடம் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மாதிரி விண்ணப்பப்படிவத்தினை வலயக் கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு அதற்கமைய விண்ணப்பிக்க விரும்புவோர்கள் தங்கள் விண்ணப்பங்களை 18.04.2007 ஆம்திகதிக்கு முன் உரிய முறைப்படி வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)

## எந்த பகுதியையும்...

பிரதமர் நிராகரித்துள்ளதாக ரணில் சுட்டிக்காட்டினார். மிக் விமானங்கள், கிபிர் விமானங்களை விடுதலைப்புலிகள் அழிக்க முடியாது எனக்கருதி, சம்பவத்தை கருத்திற் கொள்ளாது, மக்களை ஏமாற்றும் தருணமல்ல இது எனவும் இத் தாக்குதலின் மூலம் கொழும்பு நகரில் உள்ள குறைபாடு களை வெளிப்படுத்துவதாக எதிர்க்கட்சித் தலைவர் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

இதற்கு நேரடியாக பதில் கூறவேண்டியவர்கள் யார் என்பதை மக்கள் அறிந்துகொள்ள சந்தர்ப்பம் வழங்குவதற்காகவே நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு தான் கோரியதாக அவர் தெரிவித்தார்.

எனினும் சிறந்த நிர்வாகம் மற்றும் வினைத்திறன் மிக்க நடவடிக்கைகளுக்காக அர்ப்பணிப்புக்களை மேற்கொள்வதாக அரசாங்கம் கூறியபோதும் நாடாளுமன்றத்தை கூட்டவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதாகக் கூறிக்கொண்டு அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளை முழுமையாக அழிக்கும் நோக்கிலான யுத்தத்தை தெரிவுசெய்துள்ளதாக அவர் குற்றம் சுமத்தினார். (ச-1,3)

## வவுனியாவில்...

விடுதலைப்புலிகளின் இராணுவச் சீருடையில் இருந்த இவர்களிடம் இருந்து இரண்டு ரி.56 ரக துப்பாக்கிகள் மற் றும் இராணுவத் தளபாடங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-3)

## கல்முனையில்...

நடாத்தி விட்டு திரும்பிச் செல்லும் போது பின் தொடர்ந்து சென்ற இராணு வத்தினரால் இருவர் சுட்டுக்கொல்லப்பட்ட க பாதுகாப்புத் தரப்பு தெரிவித்துள்ளது.

இவ் இருவரது சடலங்கள கல்முனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடரும் இராணுவ நடவடிக்கைகளில் நேற்று முன்தினம் இரவு அம்பிலாம்துறைப் பிரதேசத்தையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளதாக பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

இந் நடவடிக்கையின்போது அந்தப் பகுதிகளில் இருந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் நான்கு முகாம்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் வாகனங்கள் உட்பட சில பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவத்தரப்பு மேலும் கூறியுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் இரவு உன்னிச்சைப் பகுதியில் இடம்பெற்ற மோதல்களில் 23 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மோதல்கள் நடைபெற்ற இடங்களில் இருந்து பத்து சடலங்களும் ,துப்பாக்கிகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக இராணுவம் கூறியுள்ளது. (ச-3)

## அரசுடன்...

தனியான ஆசனம் ஒதுக்கப்பட் டமையால் பாராளுமன்றத்தில் தற்போதைக்கு உரையாற்ற அனுமதி அளிக்கமுடியாதென சபாநாயகர் தெரிவித்தார்.

அதேவேளை ஐ.தே.க.பாராளுமன்ற உறுப்பினர் குணசேகர தமக்கு வழங்கப்பட்டிருந்த புகையிரத பிரதியமைச்சர் பதவியையும் இராஜினாமா செய்துள்ளார். அவர் தமது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளார்.

மேலும் பாராளுமன்ற உறுப்பினர் எட்வேட் குணசேகர எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர்ந்தமை தொடர்பாக ஏற்பட்ட சர்ச்சையால் பாராளுமன்றம் முற்பகல் 11.30 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது. இதேவேளை அரசாங்கத்தில் இணைந்து கொண்ட பல ஐக்கிய தேசியக்கட்சியினர் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளதா கவும் அவர்கள் மீண்டும் ஐ.தே.கவுடன் இணையவுள்ளனர் எனவும் எட்வேட் குண சேகர தெரிவித்துள்ளார். (ச-3,5)

## முல்லைத்தீவில்...

நான்கு பொதுமக்கள் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவுவைத் தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக கிளிநொச்சி செய்திகள் தெரிவித்தன. (ச-3)

## பயங்கரவாதத்தை...

கட்டுநாயக்கா விமானத் தளம் மீது சமீபத்தில் விடுதலைப்புலிகள் நடாத்திய விமானத்தாக்குதல் இந்த பிராந்தியத்தில் பயங்கரவாத தாக்குதலுக்கு பாதுகாப்பான பிராந்தியம் இல்லை என்பதை அனைவருக்கும் உணர்த்தியிருக்கிறது என்று மகிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

தெற்காசிய பிராந்தியத்தில் உள்ள நாடுகள் ஒன்றுபட்டு செயற்படாவிட்டால் பயங்கரவாதிகள் பிராந்தியத்தின் சில பகுதிகளை தங்களது பாதுகாப்பான இடமாக பயன்படுத்திக் கொண்டு செயற்படுவார்கள்.

நவீன காலப் பயங்கரவாதிகள் அரசியல், இராணுவம், நிதி மற்றும் கொள்கை என அணுகுமுறையாக செய்கிறார்கள். அதனால் அந்த பயங்கரவாதத்தை நசுக்க சார்க் கூட்டமைப்பு நாடுகள் நிலையான அணுகுமுறையினை கையாள வேண்டும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

பயங்கரவாதத்தை ஒடுக்கி மக்கள் வாழ்வதற்கு பாதுகாப்பான பகுதியாக இலங்கையினை மாற்ற அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது என்றார்.

பயங்கரவாதத்தை ஒடுக்கவேண்டிய அதே நேரத்தில் அரசியல் ரீதியான தீர்வு காண்பதற்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகளைப் போல சார்க் நாடுகளும் கூட்டமைப்பாக மாற வேண்டும். அதன் மூலம் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக பல்வேறு சாதனைகளை படைக்கமுடியும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய கூட்டமைப்பைப் போல சார்க் நாடுகள் கூட்டமைப்புக்கென பொதுவான முறையினை ஏற்படுத்தினால் இந்த பிராந்தியத்தின் வளர்ச்சிக்கு பெரும் உதவிகரமாக இருக்கும் என்றும் ஜனாதிபதி விருப்பம் தெரிவித்துள்ளார்.

தெற்காசிய நாடுகளுக்கிடையிலான தடையற்ற வர்த்தக உடன்பாட்டை முழுமையாகவும் அர்ப்பணிப்புடனும் அமுல் படுத்தினால் வர்த்தக ரீதியாக சார்க் நாடுகள் பெருமளவு பயனடைய முடியுமென்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறினார். (ச-3)

## புலிகளின் விமானத்தாக்குதலையடுத்து...

தொடர்பாக எல்லா கட்சி உறுப் ·பினர்களுக்கும் விளக்கவுள்ளோம்.

படையினரின் ஆலோசனையுடன் தேவைப்படும் அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளையும் நாம் செய்துள்ளோம் என அவர் தெரிவித்தார். நாடாளுமன்றத்தின் மீது விடுதலைப் புலிகள் வான் தாக்குதலை நடத்தும் சாத்தியங்கள் இருப்பதால் அதன் பாதுகாப்பை அதிகரிக்கும்படி தேசிய பாரம்பரிய அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க கடந்த வாரம் நாடாளுமன்ற சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டாரவை கேட்டிருந்தார்.

நாடாளுமன்றத்தின் மீது தாக்குதல் இடம்பெற்றால் அது பேரழிவாக அமைந்து விடும் எனவும் அவர் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## 14 ஆவது...

சீனா, யப்பான், தென் கொரியா,ஈரான் உள்ளிட்ட நாடுகளின் பிரதிநிதிகள் பார்வையாளராக கலந்து கொண்ட னர்.இம் மாநாட்டில் எல்லா நாட்டுத் தலைவர்களும் சிறப்புரையாற்றினார்கள். (ச)

## இந்திய...

கற்பிட்டி என்ற மன்னர் கடற்பரப்பில் இந்திய மீனவர்களை இலங்கை மீனவர்கள் கடத்திச் சென்றதாகவும் உருட்டுக்கட்டையால் தம்மை தாக்கியதாகவும் இந்திய மீனவர்கள் தெரிவித்துள்ளதாகவும், மீனவர்கள் கடல் கண்காணிப்பு பொலிஸாரிடம் இது தொடர்பாக விளக்கமளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச)




இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.04.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.